மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : விஞ நெல்லுக்கு அளிக்கப்படுகின்ற சலுகை பற்றியது. நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் என்ற வகையில் அங்கே சென்றும் அந்த சலுகை பாயக்கூடும். எனினும் எச்.பி. 3 கம்பைப் பற்றி கேட்கிறார்கள் ; அதைப் பற்றி தனிக் கேள்வி போடவும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தமிழ்நாடு அரசு நெல்லை மூன்றும் போகம் சாகுபடி செய்வதற்கு ஊக்கம் அளிப்பது போல் புஞ்சை உணவு தானியங்களான கேழ்வரகு, சோளம் போன்ற வற்றைப் பயிரிடுவதற்கு ஊக்கம் அளிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இதை அரசு ஆராய்ந்து ஆவன செய்யும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

Fertiliser Fund.

*674 *Q.*—THIRU N. K. PALANISAMY : THIRU KA. VEZHAVENDAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to create a Fertiliser Fund out of the income accruing from the sale of fertilisers ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : பேரவைமுன் விவர அறிக்கையொன்று @வைக்கப்பட்டுள்ளது.

Allotment of Fertilisers.

*675 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the quantity of fertilisers proposed to be allotted to Tamil Nadu during 1974–75?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : பேரவைமுன் விவர அறிக்கையொன்று £ வைக்கப்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : இந்த உர நிதி இதுவரை எவ்வளவு சேர்ந்திருக்கிறது ? சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு விவசாயம் செய்யும் இடங்களிலே இருந்து கரும்பு வருவதற்கு சர்க்கரை ஆலை

@ 110-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

£ 111-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

செஸ் மூலம் இணைப்புச் சாலைகள் பல கிராமங்களுக்குப் போடப் பட்டிருக்கின்றன. ஆனால் பல கிராமங்கள் இப்படி இணைப்புச் சாலைகள் இல்லாத கிராமங்களாக காட்சிக் அளிக்கின்றன. ஆகவே இந்த உர நிதியின் மூலமாக வரும் நிதியைக் கொண்டு, பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுத்து இணைப்புச் சாலைகள் இல்லாத இடங்களிலே இணைப்புச் சாலைகள் அமைக்க வழி வகை செய்ய முடியுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : உர நிதி எவ்வளவு சேர்ந்திருக்கிறது என்பது பற்றிய விவரம் என் கையில் இல்லை. எந்த ஆலை இருக்கும் பகுதியிலே ரோடுகள் போடப்படவில்லை என்று குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவார்களேயானால், அது ஆராயப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : இப்பொழுது வறட்சி காரணமாக அதிகமான தேவை இல்லை. ஆகவே, சர்க்கார் இன்னும் இருக்கக்கூடிய பெர்ட்டிலைசர் பூராவையும் டிஸ்ட்ரிப்யூட் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அது பூராவும் கள்ள மார்க்கெட்டுக்குத்தான் போகிறது. வியாபாரிகள் வாங்கிப் பதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரி வறட்சியாக இருக்கும் பொழுது, வெள்ளாமை இல்லாமல் இருக்கும்பொழுது சர்க்கார் தேக்கி வைத்து மழை பெய்யும் காலங்களிலே அதை விநியோகம் செய்யக் கூடாதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பெர்ட்டிலைசரை விநியோகம் இரண்டு வகையில் செய்கிறோம். அரசாங்கமே உற்பத்தி செய்வது ; பிறகு தனியார் துறையில் உற்பத்தி செய்வது. தனியார் துறையில் உற்பத்தி செய்வது எல்லாம் பொதுவாக பெரும்பகுதி தனியார் துறையிலுள்ள வியாபாரிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. ஒரு வேளை அதிலே பிளாக் மார்க்கெட் இருக்குமோ என்பது பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. ஆனால், அரசாங்கத்தின் மூலமாக உற்பத்தி செய்யக் கூடிய உரம் விநியோகிக்கிற முறை எப்படியென்றால் கூட்டுறவு சங்கங்களின் மூலமாகத்தான் அதை விநியோகிக்கிறோம். அப்படி எந்த கூட்டுறவுச் சங்கத்திலேயாவது தவறு நடந்தால் உடனே அதன் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, தற்பொழுது கிராம கூட்டுறவுச் சங்கங்களிலேதான் உரம் விநியோகம் செய்கிறார்கள். ஆனால் கூட்டுறவு சங்கங்களிலே இருக்கும் செக்ரட்டரியே எல்லா காரியங்களையும் செய்கிறார்கள். எனவே, அவர்கள் உர விநியோகம் செய்யும்பொழுது குறிப்பிட்ட நேரங்களிலே விவசாயிகளுக்கு உரம் கிடைப்பதில்லை. ஆகவே அரசாங்க செலவிலே ஒரு கிளார்க்கை போட்டு அதை நிர்வகிக்க ஏற்பாடு ஏதாவது செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: அநேக கிராமங்களிலே இருக்கும் கூட்டுறவுச் சங்கங்களிலே கிளார்க்குகள் இருக்கிருர்கள். எந்த கிராம கூட்டுறவு சங்கத்திலேயாவது உரம் தட்டுப்பாடு இருப்பதாகத் தெரிந்தால் உடனடியாக அந்த சங்கத்திற்கு உரம் தரப்படுகிறது. அதற்காக வாரா வாரம் புள்ளி விவரங்களை சேகரித்து வருகிருேம். ஆங்காங்கே இருக்கும் ரீஜினல் ஆபீசர், கலெக்டர் போன்றவர்கள் அவற்றை அனுப்பிக் கொண்டிருக்கிருர்கள். தட்டுப்பாடு ஏற்படுகின்ற இடங்களிலே தாமதம் இல்லாமல் உரம் அனுப்பப்படுகிறது.

திரு. பெ. சீனிவாசன்: இந்த உரத்தின் விலை விவசாயிகள் இப்பொழுது வாங்கி உபயோகிக்க முடியாத அளவிற்கு அதிகமாக இருக்கிறது. இருந்தாலும் வேறு வழியின்றி வாங்கிப் போடுகிருர்கள். அப்படி போடும்பொழுது பூச்சியினல் விவசாயம் கெட்டு, விளைச்சல் வராமல் இருக்கின்ற குறிப்பிட்ட உரம் போட்ட நிலத்திற்கு நஷ்ட ஈடு தர அந்த பண்டிலே இருந்து அரசாங்கம் ஒதுக்கீடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: தற்பொழுது அந்த நிதி இன்னின்ன காரியங்களுக்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்று இங்கே தாக்கல் செய்த விவர அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. பயிர் விளையாமல் போகுமாஞல் அதற்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்பது இந்த அறிக்கையில் இல்லை.

திரு. பெ. சீனிவாசன்: விவர அறிக்கையில் இல்லாததால்தான் நான் கேட்கிறேன்; அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: ஏற்கெனவே உத்தரவு போட்டிருப்பதைத்தான் இதிலே குறிப்பிட்டிருக்கிருேம்.

அம்பாசமுத்திரம் ஒன்றியத்தில் உர விநியோக அட்டைகள் வழங்கல்.

*676. விஞ—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள ஊராட்சிகளுக்கு 1384-ம் பசலிக்கு இரசாயன உர விநியோக அட்டைகள் வழங்கப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர்களுக்கு உரங்கள் வழங்கப்பட்டுள்ளன?

(இ) அதன் மூலம் எத்தனை ஏக்கர் நிலம் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டது?